රෙජිස්ට්‍රාර්/අධ්‍යක්ෂ ජනරාල්:
பணிப்பாளர் நாயகம்/பதிவாளர் 011-2864483
Director Genaral/Registrar

අධ්‍යක්ෂ
பணிப்பாளர் 011-2888424
Director

සහකාර අධ්‍යක්ෂ
உதவி பணிப்பாளர் 011-2884612
Asst. Director

කාර්යාලය
அலுவலகம் 011 -2877376
Office

ෆැක්ස් :
தொலை நகல 011-2884612
Fax

මගේ අංකය
எனது இல.
My No. Vsso/Ngo/Mon/General

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 29.07.2024

මහජන ආරක්ෂක අමාත්‍යාංශය
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
**Ministry of Public Security**

**රාජ්‍ය නොවන සංවිධාන පිළිබඳ ජාතික ලේකම් කාර්යාලය - 14 වන මහල, සුහුරුපාය, බත්තරමුල්ල.**
**அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகம் - 14ஆம்மாடி, சுருபாய, பத்தரமுல்ல.**
**National Secretariat for Non-governmental Organizations - 14th Floor, Suhurupaya, Battaramulla.**

විද්‍යුත් තැපැල් மின் அஞ்சல் E-mail:ngosecretariat.gov@gmail.com

**சுற்று நிருப இல 10**

அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து பிரதேச செயலாளர்கள்,
அனைத்து மாவட்ட அரச சார்பற்ற ஒருங்கிணைப்பாளர்கள்

**<u>தொண்டர் சமூக சேவை அமைப்புக்கள்/ அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு அறிக்கையை பெற்றுக்கொள்ளல் தொடர்பானது.</u>**

தொண்டர் சமூக சேவை அமைப்புக்களின் நிதி செயற்பாடுகள் உரிய முறைப்படி கணக்காய்வு செய்யப்படாமல் இருப்பதாக அவர்களது அங்கத்தவர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர்களால் குறிப்பிடப்படுவதுடன் தினம்தோறும் கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதனால் குறித்த அமைப்புக்களின் கணக்காய்வினை ஒழுங்குபடுத்துவதற்காக இச்சுற்று நிருபம் வெளியிடப்படுகின்றது.

02. 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தொண்டர் சமூக சேவை அமைப்புக்கள் ( பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டத்தின் 09வது பிரிவில் பதிவாளரின் அதிகாரத்தின் கீழ் (ஈ) உப பிரிவில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**'ஒவ்வொரு வருடமும் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது உரிய முறைப்படி குறித்த அமைப்புக்களின் கணக்குகளினை கணக்காய்வு செய்தல் அல்லது கணக்காய்வு செய்வதற்கு தயாராதல்''**

03. அதன்படி கீழ் குறிப்பிடப்படும் அடிப்படையில் வருடாந்த கணக்காய்வு செயன்முறையை ஒழுங்குபடுத்தல் மற்றும் அறிக்கையை பெற்றுக்கொள்ளலை ஏற்புடையதாக்கல் வேண்டும்.

**அ. தேசிய மட்டத்தில் பதிவினை கொண்ட அமைப்புக்கள்**
தேசிய மட்டத்தில் பதிவினை பெற்றுக்கொண்ட அனைத்து அமைப்புக்களின் கணக்கறிக்கை அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு குறித்த கணக்காய்வு அறிக்கை நிதி வருடம் நிறைவடைந்து இரண்டு மாதத்தினுள் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.

**ஆ. மாவட்ட மட்டத்தில் பதிவினை கொண்ட அமைப்புக்கள்**
மாவட்ட மட்டத்தில் பதிவினை கொண்டுள்ள அனைத்து அமைப்புக்களது வருடாந்த கணக்கறிக்கை பொதுக்கூட்டத்தில் நியமிக்கப்படும் கணக்காய்வு குழு அல்லது கணக்கு பரீட்சகர் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டு நிதி வருடம் நிறைவு பெற்று ஒரு மாதத்தினுள் உரிய மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.

**இ.பிரதேச மட்டத்தில் பதிவினை கொண்டுள்ள அமைப்புக்கள்**
பிரதேச மட்டத்தில் பதிவினை கொண்டுள்ள அனைத்து அமைப்புக்களது வருடாந்த கணக்கறிக்கை பொதுக்கூட்டத்தில் நியமிக்கப்படும் கணக்காய்வு குழு அல்லது கணக்கு பரீட்சகர் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டு நிதி வருடம் நிறைவு பெற்று ஒரு மாதத்தினுள் உரிய பிரதேச செயலகத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.

04. குறித்த விடயங்களுக்கு மேலதிகமாக அனைத்து அமைப்புக்களாலும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை பேணிச்செல்ல வேண்டும் என்று 1101/14 ஆம் இலக்க மற்றும் 1999 ஒக்டோபர் 15 ம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது

- வங்கி கணக்கு உள்ளிட்ட காசு புத்தகம்
- கட்டு நிதி புத்தகம்
- பிரதான லெட்ஜர்
- பிரதான ஜேனல்
- அங்கத்தவர் கட்டண புத்தகம்
- கடனாளிகள் மற்றும் கடன் உரித்தாளர்களின் லெட்ஜர்
- உப பத்திர புத்தகம்
- பற்றுச்சீட்டு விநியோகிக்கும் லெட்ஜர்
- சொத்து பதிவேடுகள்
- செயற்குழு அறிக்கை புத்தகம்
- அங்கத்தவர் பதிவேடு
- நியமன கடிதம் உள்ளிட்ட அங்கத்தவர்களின் பணிக்குழாத்தினரின் மற்றும் அங்கத்தவர்களின் விபரங்கள்.
- உரிய சட்டம் மற்றும் கட்டளை உள்ளிட்ட கடிதங்கள்

அதன்படி வர்த்தமானி அறிவித்தலின்படி குறிப்பிடப்பட்ட ஆவணங்களை பேணிச்செல்லுமாறு அறிவுரை வழங்குதல் வேண்டும்.

05. இச்சுற்று நிருபத்தின் 03 இல் (அ) (ஆ) (இ) பந்திகளின் பிரகாரம் அனைத்து பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் மூலம் உரிய காலப்பகுதியினுள் வருடாந்த கணக்காய்வு பொறிமுறையை மேற்கொள்ளல் மற்றும் அறிக்கைகளை வழங்க அறிவுறுத்தல் வேண்டும்.

சஞ்சீவ விமலகுணரத்ன
பணிப்பாளர் நாயகம்/ பதிவாளர்

பிரதி:- அனைத்து தொண்டர் சமூக சேவை அமைப்புக்கள்